கால்நடை மருத்துவக் கல்லூரி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்)

*வினா 1540. திரு. வீ. பெ. துரைசாமி :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கால் நடை மருத்துவக் கல்லூரி நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு மாற்றும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

கால்நடை மருத்துவமனை.

*வினா 3119. திரு. வி. பி. இராசன் :
மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

இராசபாளையம் நகரத்தில் உள்ள கால் நடை மருத்துவ மனையை பெரிய மருத்துவமனையாக(Clinician Centre) மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கால் நடை மருத்துவமனைகளை தரம் உயர்த்தும் திட் டத்தின் கீழ் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இராச பாளையம் கால் நடை மருத்துவமனை உட்பட 75 (எழுபத் தைந்து) கால் நடை மருத்துவமனைகளை பிரதம மருத்துவ மனைகளாக (Clinician Centre களாக) தரம் உயர்த்துகின்ற செயற் குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. வி, பி. இராசன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஆய்வில் உள்ளது என்று அறிவித்திருக்கிறார்கள். அது எப்பொழுது செயல்படுத்தப்படும் என்பதை அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 19]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப அந்தச் செயற் குறிப்பை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை.

* *5576.*—**திரு. இரா. மதிவாணன் :**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலில் மீன் பிடிக்கும் பொழுது உயிரிழக்க நேரிடும் மீனவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவரின் பிள்ளைகளுக்கு மீனளத்துறை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு ஒரு சப்மிஷன்தான். தாங்கள் சொன்னதைப் போல, இரண்டு மாநில போலீஸ்களைச் சமாளித்துக் கொண்டிருக்கின்ற அந்தக் கடத்தல் கயவனைப் பற்றி நான் கேட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு, அதை மறுத்ததற்கான விளக்கம் இன்னும் எனக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடனடியாக நான் அதைக் கவனித்து ஆவன செய்கிறேன்.